# கடற்கரை கவியரங்கு – 635

நாள்: 03-03-2024.

## கலங்காதிரு மனமே!

என்மனம் என்னிலை என்றே எண்ணாதீர்!
வன்மமே அதனால் மனதில் உருவாகும்!
தன்னிலை உணர்ந்தே யாவரும் வாழ்ந்திட்டால்,
பொன் தரும் மனமாய் வாழ்க்கைப் பூரிக்கும்!

தொல்லையை நினைத்தே நாளும் கலங்காமல்,
அல்லலாய் வாழ்வை என்றும் நினையாமல்,
வல்லமைத் தருவது மனமென்று அறிந்திட்டால்,
புல்லின் பனித்துளி கண்டிட மகிழ்ந்திடுவோம்!

மாசு மறுவின்றி, மனந்தன்னை நிறுத்திடுவோம்!
காசு பணமெல்லாம் வாழ்வின் கரமென்போமோ!
தூசு போல்தட்டியே துன்பத்தை துரத்திடுவோம்!
பேசும் மொழியில் அன்பிருந்தால் பேதமைதானில்லை!

வாகைசூட வாழ்வினிலே வகையாய் அன்பிடுவோம்!
தோகை மயிலின் அகவுதலில் இனிமையுண்டோ?
கூகையின் அலறல், கேட்டிட மனம் தளருமன்றோ!
காகம் கரைந்திட கருமை நிறமே தெரியாது!

ஒவ்வொரு நிலையிலும் உயர்வுண்டு! வாழ்வின்;
ஒவ்வொரு நிலைக்கும் களமுண்டு; அறிந்தால்,
செவ்விய மனம்கொண்டு வாழ்ந்திடுவோம்! நாளும்,
ஒவ்வொரு நிலையும் மகிழ்ந்திருப்போம்! ஆகலின்,

கள்ளமில்லாப் அன்புடனே நாளும் வாழ்ந்திடுவோம்!
எள்ளி நகைப்போரை என்று விலக்கி வைப்போம்!
துள்ளும் மனமாய் துன்பமின்றியே வாழ்ந்திடலாம்!
வள்ளுவர் சொல்வழி வாழ்வோம் என்றும் மகிழ்ந்தே!

- **கவிவளவன்.** ஆகிய **கு.ப. அசோகன்.**

**03-03-2024 (மாலை 04-30)**